# திருமுறையும் பணிவன்பும்

பேராசிரியர் கனகசுந்தரம்
சிங்கப்பூர்

## திருமுறைகள் யாவை?

திருமுறைகள் தெய்வத்தன்மை வாய்ந்த நூல்கள் எனப் பொருள் கொள்ளலாம். மதிவளர் சடைமுடி மன்றுளாரைத்துதி செய்யும் நாயன்மார்களாகிய சைவ சமயச் சான்றோர்கள் அருளிச் செய்த பாடல்களின் தொகுப்பே திருமுறைகளாகும். சைவ சமயத்தின் பெருமைகளைப் பெரிதும் எடுத்துக் கூறும் பத்தி இலக்கியங்களே திருமுறைகள் என்றும் சில பெரியோர்கள் கூறுவர். இந்நூல்கள் சமஸ்கிருதத்தில் அமைந்துள்ள வேதாகமங்களுக்குச் சமமாகக் கருதப்படுதலால் இத்திருவருள் நூல்கள் திருமாமறைகளெனவும், திருமாமுறைகளெனவும் கூறலாம். (மறை -வேதம்; முறை -ஆகமம்). இதற்குச் சான்றாக நம் மூதாதையாராகிய ஔவைப் பிராட்டியாரும், ''தேவர் குறளும் திருநான்மறை முடிவும்; மூவர் தமிழும் முனிமொழியும் -கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்'' எனத் திருமுறைகளை நான்கு வேதங்களுக்கும் ஒப்பானவையெனப் பாடிப் புகழ்ந்திருக்கின்றார். ஆகவே வேதங்கள் எவ்வாறு பதிவாக்கியங்களோ அவ்வாறே திருமுறைகளும் பதி அல்லது இறைவாக்கியங்களே.

## பணிவன்பு என்றால் என்ன?

பணிவு என்ற சொல் அன்பு என்ற பதத்துடன் சேர்ந்தே பணிவன்பு என ஒலிக்கின்றது. பணிவு **(humility)** மனித குலத்திற் காணப்படும் ஓர் சிறந்த பண்பாடு. சிறுபிள்ளை பெரியோருக்கும், ஆசிரியர் போன்ற பெரியோர்களுக்கும் பணிவு காட்டி நடக்கிறார்கள். அது போலவே நாமும் பெரியோர்கட்கும் சிவனடியார்கட்கும் எங்கள் பணிவைச் சமர்ப்பிக்கின்றோம். இப்படி மனிதனுக்கு மனிதனே பணிவு காட்டுவானானால் எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த, எல்லாமறிந்த, எங்கள் கற்பனைக்கே கடந்து நிற்கின்ற கருணை வள்ளலாகிய இறைவனுக்கு நம் பணிவைச் செலுத்த வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகின்றது. மேலும், மனிதனுக்கு மனிதன் காட்டும் பணிவும் இறுதியில் ''ஊனுக்குள் ஈசன் ஒளித்திருந்தானே'' என்ற திருமூலர் வாக்குக்கிணங்க இறைவனையே சேருகின்றது. ஆகையால் ''என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற நாவுக்கரசர் வாக்குக்கிணங்க இறைவன் திருப்பணியைப் பணிவுடன் ஆற்ற வேண்டும் என்பது தெளிவாகின்றது. திருமுறைகளில் அடியார்கள் தம்மைத் தாழ்த்தியும் இறைவன் பெருமையைப் புகழ்ந்தும் பாடுவதைப் பலவிடங்களிலும் காண்கிறோம். ''வஞ்ச நெஞ்சனை; நலமிலாதனை'' என ஞானசம்பந்தரும், ''குலம்பொல்லேன், குணம்பொல்லேன்; நலம்பொல்லேன், நான் பொல்லேன் ஞானியல்லேன்'' என நாவுக்கரசரும், ''நாயேன் பல நாளும் நினைக்கின்றேன்'' எனச் சுந்தரரும் ''நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு'' என மணிவாசகப் பெருமானும் கூறுவது அடியார்கள் இறைவனிடத்தில் காட்டும் பணிவை வெளிப்படுத்துகின்றன.

## அன்பின் பெருமை

அன்பு என்னும் குணத்தை எல்லாப் பிராணிகளிடத்தும் காண்கிறோம். நாகப்பாம்பிற்கும் தன் குட்டிமேல் அன்புண்டு. இவ்வன்பு தன்னலம் கருதாமல் உண்டாவதால் மெய்யன்பு எனக் குறிக்கப்படும். இப்படியான மெய்யன்பின் பெருமையைச் சுவாமி சிவானந்தா பின்வருமாறு கூறியுள்ளார்:-''**Love is an innate sense of oneness with the entire creation. It is absolutely unselfish and nonsensual.**'' ''எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும், நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'' எனத் தாயுமானவரும் அன்பின் பரந்த குணத்தைப் பற்றிப் பாடியுள்ளார். இதுபோலவே சுவாமி விவேகானந்தரும் அன்பு, பொருள் கொடுத்து வாங்கும் பொக்கிஷம் அல்ல எனவும், அன்பு போட்டிக்கு அப்பாற்பட்டதெனவும், அன்பு இறைவனிடமிருக்கும் பயத்தினால் உண்டாகும் குணம் அல்லவெனவும் கூறியிருக்கிறார். ஆன்மாக்களிடத்தும் ஆண்டவனிடத்தும் அன்பு செலுத்தவேண்டுமென்பதே சைவ சமயக் கொள்கை. எமது கட்டற்ற ஆன்மா உடம்புக் கூட்டில் தங்கியிருப்பதும் அதன் அன்பை விரும்பியே. ஆகையால் அன்பிற்குத் தாழ்ப்பாள் கிடையாது. இப்படியான அன்பு பரந்து வரும் நிலையில் இறைவனையே நாடுகின்றது. அந்நிலையில் இறைவனே அவ்வடியவனின் அன்பில் மயங்கிவிடுகின்றான். இதனாலேயே அன்பே சிவம் என்பார் பெரியரே. இதற்குச் சான்றாகத் திருமூலரும், ''அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலர்,
அன்பே சிவமாவதாரு மறிந்திலர்,
அன்பே சிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே '' எனக் கூறியுளார். அன்பின் சொரூபமாய் நின்றவன் கண்ணப்பன். அவனுடைய அன்பைச்

சிவபெருமானே வியந்து சிவகோசரியாருக்குச் சொப்பனத்திலே தோன்றிச் சொல்லுகிறார்:-

"அவன் அன்பே வடிவுள்ளவன். - அவன் தலையிலே சூடிவந்து சாத்துகின்ற பூ பிரமா விஷ்ணு சாற்றுகின்ற தன்மையிலும் சிறந்தது. அவன் வாயிலே கொண்டு வந்து உமிழும் நீர் கங்கா தீர்த்தத்திலும் சிறந்த அபிஷேகம். அவன் செருப்பால் திருமேனியிலிருந்து அகற்றும் பூக்கள் நமது சுப்பிரமணியன் தழுவுதலிலும் சிறந்தது. அவன் படைக்கும் இறைச்சி யாகம் செய்கின்றவர் தரும் அவியிலும் பார்க்க அதிமதுரமானது. "இவ்வாறாகச் சிறந்த கண்ணப்பன் அன்பை சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் மிகவும் புகழ்ந்து பாடுகின்றார்:-"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும், அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும், அவனுடைய செயலெலாம் நமக்கினியவாவென்றும், அவனுடைய நிலை இவ்வாறறி என்றருள் செய்வார்". இதனாலேயே மணிவாசகரும் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" எனத் திருவாசகத்தில் கண்ணப்பனுடைய ஆழ்ந்த அன்பை நமக்கெல்லாம் எடுத்துக் காட்டுகின்றார். கண்ணப்பன் போலவே சாக்கிய நாயனாரும் கல்லை எறிந்து அன்புடன் இறைவனைப் பூசித்தார். அது இறைவனுக்கு மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் அன்பின்றி மன்மதன் சாற்றும் மலரோ ஈசனுக்கு வெறுப்பையே உண்டாக்கியது. இதை ஔவைப் பிராட்டியார், "ஈசற்கு, நல்லோனெறி சிலையோ நன்னுதாலொண் கருப்பு வில்லோன் மலரோ விருப்பு" என வினவுகின்றார். ஆகவே இறைவனை நாடுவது அன்பின் மூலமேயென்பது தெளிவாகின்றது. ஒரே மனத்துடன் கடவுளிடம் செலுத்தும் அன்பையே 'பத்தி' எனக் கூறுவார்கள். இப்படியான பத்திக்கு பணிவன்பே வித்தாக அமைகின்றது.

**பணிவன்பை நாம் ஏன் வளர்க்க முடியவில்லை?**

இதற்குக் காரணங்கள் உண்டு. நம்மைச் சூழ்ந்திருக்கும் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயையே உயிராகிய பசுவை மயக்கி, இறைவனாகிய பதியில் அன்பைச் செலுத்தாமல் சிற்றின்ப வழியிற் தள்ளுகின்றன. உலக இன்பங்களில் உயிரை ஈடுபடுத்துவது மாயை. மண், பெண், பொன் என்னும் பொருட்களில் உண்டாகும் ஆசையால் மனம் புலன்கள் வழி சென்று சிற்றின்பத்தை நாடுகின்றது. இதனாலேயே "மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய" என வாதவூரடிகளும், "புள்ளுவர் கள்வர் ஐவர்" என நாவுக்கரசரும் ஐம்புலன்களின் ஆற்றலைப் பற்றிக் கூறியுள்ளார்கள். மண், பெண், பொன் என்பவற்றில் பெண்ணாசையே மிகவுங் கொடியது என்பதைத் திருமுறைகள் சாற்றியிருக்கின்றன. "பொய் எல்லாம் மெய்யென்று புணர் முலையார் போகத்தே" என்றும் "தையலார் மையலிலே தாழ்ந்து விழக்கடவேனை" என்னும் மணிவாசகர் வாக்கியத்தைத் திருவாசகத்தில் காண்கிறோம். இதனாலேயே "ஆசை அறுமின்கள், ஆசை அறுமின்கள்" எனத் திருமூலர் நமக்குப் புத்தி புகட்டுகின்றார். மேற்கூறியவற்றால் பெண்கள் கூடாதவர்கள் என்ற கருத்தல்ல. அவர்களில் மங்கையர்க்கரசியார், திலகவதியார், புனிதவதியார் (காரைக்காலம்மையார்) போன்றவர்களைக் கண்கண்ட தெய்வங்களாகக் கருதுகின்றோம். ஏனெனில் அவர்கள் இறைவன் அடியார்கள். "கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பராகில், அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்றார் நாவுக்கரசர்.

மாயை உயிரை உலக இன்பங்களில் ஈடுபடுத்தும் தன்மையுடையதாயினும், சிற்றின்ப வாழ்வு நிலையற்றது என்பதை நமக்கு உணர்விப்பதால் நிலையுள்ள இன்பத்தைக் கொடுக்கும் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும் ஒரு வகையில் நமக்குப் புகுத்துகின்றது.

கன்மம் :- இது இந்து சமயத்தின் ஓர் பிரதானமான கோட்பாடு. நாம் செய்யும் நல்வினை, தீவினை இவற்றின் பயனை நாமே அனுபவித்தே ஆக வேண்டும் என்பதே இதன் கருத்து. "As you sow, so will you reap" என்றார் யேசுகிறிஸ்துநாதர். இந்தக் கன்மத் தத்துவத்தின் மூலமே உலகில் காணப்படும் பற்பல மர்மங்களுக்கும் மனிதருக்குள் நிலவும் வேறுபாடான நிலைகளுக்கும் விளக்கம் அளிக்கக் கூடியதாயிருக்கின்றது. நம்மைப் பற்றித் தொடரும் இருவினைப் பாவபுண்ணியங்களை அழிப்பதற்கோ, மாற்றுவதற்கோ இறைவன் ஒருவனுக்கே முடியும். "எடுப்பானும் என்தலை மேல் அயன் தீட்டும் எழுத்தனைத்தும் கெடுப்பானும்" என்றார் ஓர் பெரியார். இதற்குச் சான்றாக மார்க்கண்டேயர் சரித்திரத்தைக் கொள்ளலாம். எவ்விதத் தீமைகளையும் இறைவன் திருவருளாற் களையலாமென்பதையே ஞானசம்பந்தர் பாடிய கோளறு பதிகமும் காட்டுகின்றது. "அஞ்சுவதி யாதொன்றுமில்லை; இனி அஞ்ச வருவதுமில்லை" என்றார் நாவுக்கரசர்.

ஆணவம்:- மும்மலங்களுள் மிகவுங் கொடியது ஆணவமே. அது ஆன்மாவின் அறிவு முழுவதையும் மறைத்து அதனை இறைவனைக் காணவொட்டாமற் தடுத்து நிற்பது. மறைப்பை நீக்கி அறிவை ஊட்டுவது பணிவன்பால் ஏற்படும் இறைவன் திருவருளே. பணிவன்பால் யானெனும் அகந்தை அகன்று உயிருக்கு இறைவனைச் சரணடையும் சத்தி ஏற்படுகின்றது. "மீளா அடிமை உமக்கே யாளாய்" எனத் திருநாவுக்கரசரும் "அன்றே யெந்தன் ஆவியுமுடலும் உடைமையெல்லாம், குன்றேயனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ" என மணிவாசகரும் தம் பணிவன்பால் இறைவனிடம் தஞ்சமடைவதைக் காண்கிறோம்.

**பணிவன்பைப் பெறும் வழி வகைகள்:**

நாயன்மார்களுடைய வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டு நாம் பணிவன்பை வளர்த்து இறைவன் திருவருளைப் பெற முடியும் என்பதே சைவ சமயத்தின் கொள்கை. சிவனடியார்கள் இறைவனிடத்தில் தங்கள் அன்பை எப்படி வளர்த்தார்கள் என்று நோக்குவோமானால் அவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய

நான்கு நிலைகளையும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது தெளிவாகின்றது. சரியை அல்லது தாச மார்க்கத்தில் இறைவனைத் தலைவனாக நம்மை அவனது அடிமையாகவும் பாவித்து ஒழுகும் நிலை. இந்நிலையைக் கடைப்பிடித்து இறைவனுக்குத் தொண்டு செய்து அவன் திருவருளைப் பெற்றவர் நாவுக்கரசர். கிரியை அல்லது சற்புத்திரமார்க்கத்தை அனுசரித்து இறைவன் திருவருட் பேரின்ப முத்தியடைந்தவர் ஞானசம்பந்தர். யோகம் அல்லது சகமார்க்கத்தைக் கடைப்பிடித்துத் தம்பிரான் தோழன் என அழைக்கப்பட்டவர் சுந்தரர். இறைவனும் தன் தோழனாகிய சுந்தரர் பெண்ணைக் கேட்டதும் பெண்ணைக் கொடுத்தார்; பொன்னைக் கேட்டதும் பொன்னைக் கொடுத்தார்; இழந்த கண்ணைக் கேட்கவே கண்ணையும் கொடுத்தார். ஞானம் அல்லது சன்மார்க்க வழியைக் கடைப்பிடித்தவர் திருவாதவூராகிய மணிவாசகப் பெருமான். அவருக்கு இறைவனே திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலிலே ஞானாசாரியாராக வந்திருந்து ஞானோபதேசம் செய்தாரென வரலாறுகள் கூறுகின்றன. சில பெரியோர்கள் ஞான மார்க்கமே எல்லாவற்றிலும் சிறந்ததெனவும், சரியை, கிரியை, யோக வழிகள் எல்லாம் ஞான மார்க்கத்தை நோக்கிச் செல்லும் படிகளாகவும் கருதுகின்றனர்.

வேறெவ்விதத்தில் நாம் இறைவனிடம் காட்டும் பணிவன்பைப் பெருக்கிக் கொள்ளலாமென்று ஆராய்வோமானால் மனம், வாக்கு, காயம் மூலமாயும் இறைவனுக்குத் தொண்டு செய்ய முடியும். ஒவ்வொரு அவயமும் எம்பெருமானை எவ்வாறு தொழ வேண்டுமென அப்பர் சுவாமிகள் ''தலையே நீவணங்காய்'' எனத் தொடங்கும் திருவங்கமாலைத் திருப்பதிகத்திலே நமக்கு வழிகாட்டி இருக்கின்றார். ''நிலை பெறுமாறெண்ணுதியேல்'' எனத் தொடங்கும் திருத்தாண்டகத்திலும் நாம் நமது உடம்பினாலே எவ்வாறு இறைவனைத் துதிக்கலாம் என்பதையும் காண்கிறோம். அத்துடன் இத்திருத்தாண்டகத்தில் ''அலைபுனல் சேர் செஞ்சடையும் ஆதி என்றும், ஆரூரான் என்றென்றே அலறானிலே'' என்று நாம் வாக்கினாலும் இறைவணக்கஞ் செய்யவேண்டுமென்பதை நாவுக்கரசர் நமக்கு அறிவுறுத்துகின்றார். வாக்கின் மூலம் ஐந்தெழுத்துக்களடங்கிய நமசிவாய'' மந்திரத்தை எந்நேரமும் ஓதி இறைவன் திருவருளைப் பெறலாம். நமசிவாயத்தை, 'சிவாயநம' வென்றும், 'சிவாயசிவ'சிவசிவ' எனவும் ஜெபிக்கலாம். 'சிவ சிவ' என்றிடத் தீவினை மாளும். ''சிவ சிவ என்றிடச் சிவகதிதானே'' எனத் திருமூலரும் ஜெபத்தின் சத்தியை நமக்குக் காட்டுகின்றார். காயத்தினாலும், வாக்கினாலும் செய்யும் வழிபாட்டிலும் சிறந்து விளங்குவது மனவழிபாடே. ''தணலது கண்ட மெழுகதுபோலத், தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து'' ''இடையறா அன்பிற் - பசுமரத்தாணி அறைந்தாற் போல, கசிவது பெருகி கடலென முறுகி'' '' அகங்குழைந்து அனுகூலமாய் மெய்விதிர்த்து '' ''கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே'' என மணிவாசகரும், ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என ஞானசம்பந்தரும், ''அன்பொடுருகி அகங்குழைந்தார்க்கன்றி என்பொன் மணியை எய்தவொண்ணாதே'' எனத் திருமூலர் வாக்கும் மனவழிபாட்டின் பெருமையை விளக்குகின்றன.

**பணிவன்பின் (பக்தியின்) பயன்**:

இறைவனின் திருவருளே பணிவன்பின் பயன். உயிரின் முதலாவது வளர்ச்சி நிலை இறைவனிடம் செலுத்தும் பணிவன்பென்றால் அதன் அடுத்த உயர்ந்த நிலை இறைவனுடைய திருவருளைப் பெற்று இன்புறும் நிலையை அடைவதே. இந்நிலையில் பத்தனுடைய அன்பும் இறைவனுடைய அருளும் ஒருங்கு சேர்ந்திருக்கும். இதை அன்பருள் நிலையென்றுங் கூறலாம். இந்நிலையில் இறைவன் பத்தனுடைய விருப்பங்களுக்கெல்லாம் செவிசாய்த்து அவன் விரும்பியதையெல்லாம் கொடுத்தருள்வான். அதுவுமன்றி ஆபத்திலே வந்து பக்கத்திலே நின்று பத்தனைக் காப்பாற்றுவான். இந்த உண்மையைப் பின்வரும் மூன்று உதாரணங்களும் நிரூபிக்கின்றன.

1. மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் திரவியங்களைப் பெற்று அதன்மூலம் அரசனுக்குக் குதிரைகள் வாங்குவதாகச் சென்று திருப்பெருந்துறையில் சிவபெருமானுக்குப் பெரிய ஆலயத்தைக் கட்டி முடித்தார். அன்பனின் அரிய செயலுக்குப் பதிலாகக் குறித்த தினத்தில் இறைவன் குதிரைகளைக் கொண்டு வந்து பாண்டியனிடத்தில் கொடுத்தருளினார். இறைவனின் திருவருட் செயலைப் புகழ்ந்து மணிவாசகர் ''ஒருங்கு திருநிலவு சடையுடையானே, நரிகளெல்லாம் பெருங்குதிரையாக்கியவாறன்றே நின் பேரருளே'' எனப் பாடியுள்ளார்.

2. கணவன் கொடுத்த மாங்கனியைப் புனிதவதியார் தன் இல்லத்திற்குச் சிவனடியார் கோலம் பூண்டு வந்த சிவபெருமானிடம் கொடுத்து அமுதளித்தார். சில நாட்கள் செல்லத் திரும்பி வந்த திலகவதியார் இறைவன் திருவருளை வேண்டி நிற்க,

''அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக்கங்கென் செய்வார்
மெய்ம் மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்
தன்மனங் கொண்டுணர்தலுமே அவர் அருளால் தாழ்குழலால்
கைம்மருங்கு வந்திருந்(து) அதிமதுரக் கனியொன்று''.

3. நந்தன் (திருநாளைப்போவார்) திருப்புன்கூர் திருவாலயத்தில் இறைவன் விக்கிரகத்தை மறைத்து நின்ற நந்தியை நோக்கி ''சற்றே விலகியிரும் பிள்ளாய்'' என்றே கூறவே நந்தி விலகியதும் நந்தன் இறைவனை நேரே பார்த்துத் தரிசிக்கக்கூடியதாயிருந்தது. இதுவுமன்றி

நாயன்மார்கள் பல அற்புதங்கள் புரிந்தமையும் இறைவன் திருவருளாலேயன்றோ.

"தொண்டர் நாதனைத்தூதிடைவிடுத்ததும்
முதலை உண்டபாலனை அழைத்ததும்
எலும்பு பெண் உருவங் கண்டதும்
மறைக் கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்தமிழ்ச் சொல்லோ மறுபுலச்
சொற்களோ சாற்றீர். "

ஆகவே பணிவன்பு என்ற மலர் மலர்ந்து அன்பருள் எனும் காயாக மாறி இன்ப அன்பாகக் கனிந்து இறுதியில் முத்திப் பேரின்பத்தையும் அளிக்கும். இந்த இன்ப அன்பு நிலையை ஆங்கிலத்தில் **Blissful love** அல்லது **State of pure consciousness** எனவுங் கூறலாம். இந்நிலையை ஈந்தருள வேண்டுமென்றே காரைக்காலம்மையார் சிவபெருமானை வேண்டி நிற்பதைக் காண்கிறோம். "இறவாத இன்ப அன்பு வேண்டி " இறுதியில் "அறவா நீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க" என்றார். இறைவனின் தூக்கிய திருவடியின் கீழ் இருப்பதே முத்திப் பேரின்பம். இதுவே திருமுறைகளும் பணிவன்பும் நமக்குக் காட்டும் நல்வழி.

